


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.12.2024) சென்னை, கலைஞர்நகர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் நடைபெற்ற APPICON 2024 மாநாட்டினை தொடங்கி வைத்து, விருதுகள் வழங்கி விழா பேருரையாற்றினார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் தனசேகர், APPICON 2024 மாநாட்டு நிர்வாகிகள் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (12.12..2024) கோவை மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தனர். உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி ஆகியோர் உள்ளனர்.



தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்றிருக்கும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 11.12.2024 அன்று இந்தோனேசியாவிற்குச் சென்று கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை இந்தோனேசியா தமிழர்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாடினார். அப்போது கார்த்திகேயன், கலையரசன், மணிகண்டன், அரவிந்த், சிவா, சுரேஷ், நாகா, வி.பி.திராவிடமணி ஆகியோர் உடனிருந்தனர். அதனைத் தொடர்ந்து நேற்று (12.12.2024) மலேசியாவில், மலேசியா தி.மு.க. அயலக அணியின் சார்பில், மலேசியா அயலக அணி பொறுப்பாளர் முகம்மது பிர்தௌஸ் கான், துணை பொறுப்பாளர் முஹம்மது ஜெயிலானி, தொழிலதிபர் E&Y சாகுல் ஹமீது மற்றும் அயலக அணி நிர்வாகிகள் சார்லஸ், ஹமீது, ஜெய்துத்தீன், முகம்மது ஷபீக் ஆகியோர் முன்னிலையில், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை மலேசியா கழகத் தோழர்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சையத்ஹபீஸ், நாகை ஏ.கே.எஸ்.முருகன் மற்றும் அயலக கழக உடன்பிறப்புக்கள் ஏ.கே.பி.ஆரிப், சிவா, அறந்தாங்கி ராஜா முகமது ஆகியோர் உடனிருந்தனர்.

## மலேசியாவில் நடந்த ஆசிய பசிபிக் போட்டியில் 24 பதக்கங்களை வென்ற

# தமிழ்நாட்டு வீரர் - வீராங்கனைகளுக்குப் பாராட்டு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!






**சென்னை, டிச.13–**

**மலேசியாவில் நடந்த 10–வது ஆசிய பசிபிக் மாற்றுத்திறனாளிகள் போட்டியில் இந்தியா வென்ற மொத்தம் 55 பதக்கங்களில் 24 பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகளுக்குப் பாராட்டு தெரிவித்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

அது வருமாறு:-

மலேசியாவில் நடைபெற்ற 10th Asia Pacific Deaf Games 2024-ல் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனையர் வெவ்வேறு விளையாட்டுக்களில் 6 தங்கம், 13 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளனர். இப்போட்டியில், இந்தியா ஒட்டுமொத்தமாக 55 பதக்கங்களை வென்றுள்ள நிலையில், அதில் 24 பதக்கங்களை தமிழ்நாட்டு வீரர், வீராங்கனையர் குவித்திருப்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்தேன். பதக்கங்களை வென்ற தம்பிகள் மணிகண்டன், ராக்கப்பன், வினித், சாந்தனு, கார்த்திக், முகம்மது யாசின், சுதன் மற்றும் தங்கைகள் பிரியங்கா, சுபஸ்ரீ, சமீஹா பர்வீன், ஹரினி, ஜெர்லின் அனிகா ஆகியோருக்கு வாழ்த்துகள்.

இப்போட்டியில் பங்கேற்க உதவிடும் வகையில், நம் வீரர்களின் பயணம் உள்ளிட்ட செலவினங்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமும், – 'எலைட்' திட்டத்தின் வழியாக தங்கை ஜெர்லின் அனிகாவுக்கும் நிதியுதவி அளித்திருந்தேன். தற்போது பதக்கங்களோடு திரும்பியுள்ள நம் வீரர் – வீராங்கனையரின் திறமையைப் பாராட்டுகிறோம். நம் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு என்றென்றும் துணை நிற்போம், அவர்களின் வெற்றிப்பயணம் தொடரட்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## உலகிற்கு வழிகாட்டும்

# ஒப்பற்ற திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்து வருகிறார்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர், டிச.13

திருவள்ளூர் மத்திய மாவட்டம் தி.மு.க. மாணவர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு எளியோர் எழுச்சி நாள் விழா மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வி. தியாகராஜன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.தென்னவன், கே.விமலாகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் வி.ஜெ.உமா மகேஸ்வரன், பி.கே.இ.கபிலன், டி.எம். தமிழ்வாணன், எஸ்.சந்தோஷ், கே.அரிகிருஷ்ணன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் விக்டர் மோகன், புருஷோத்தமன், மு.சரத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை தாங்கி விழா பேருரை ஆற்றி ஏழை எளிய பெண்களுக்கு புடவை ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் நலத்திட்ட உதவிகள் பள்ளி மாணவர்களுக்கு டேப் இளைஞர்களுக்கு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு விளையாட்டு பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:-

தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு ஆட்சியில் பொறுப்பேற்றில் இருந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பெண்களுக்கான விடியல் பயணம் உரிமைத்தொகை, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்குதல், பெண்களுக்கு உயர் கல்வி படிக்க வைத்தல், புதுமைப்பெண் திட்டம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், இல்லம் தேடி மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செய்து கொண்டு வருகிறார்.



முதலமைச்சர் பொறுப்பேற்று பின் தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி, “சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்” என்பதுடன், “சொல்லாததையும் செய்வோம்” எனக் கூறி மக்களுக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் வழங்கினார்.

தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக உயர்த்தியுள்ளது. இதனை ஒன்றிய அரசு ஆய்வு நிறுவனங்களே உறுதிப்படுத்தியுள்ளன.

அது மட்டுமல்லாமல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் நடத்தி தமிழ்நாட்டிற்கும் தமிழ் மண்ணிற்கும் பெருமை சேர்த்து உள்ளார்

உலகிற்கு வழிகாட்டும் ஒப்பற்ற திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்து வருவதாக ஆவடி சா.மு. நாசர் பெருமிதமாக தெரிவித்துக் கொண்டார்.

இதில் கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், க.பார்கவி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், ப.ச.கமலேஷ், ப.சிட்டிபாபு, எஸ்.மகாலிங்கம், சங்கீதா சீனிவாசன், கே.சரவணன், உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.



சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மேற்குபகுதி புழுதிவாக்கம் 186 வது வட்டத்தின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி உதய நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் , ஆதரவற்ற பிள்ளைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான மா. சுப்பிரமணியன் 2800 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு உடைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மாமன்ற உறுப்பினர் வட்ட செயலாளர் ஜெ.கே.மணிகண்டன், தலைமையிலும் கழக பேச்சாளர் பாலக்கரை கோவிந்தன், இளம் பேச்சாளர் இரா. மதுமிதா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ., .சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் த.விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர்கள் வ.பாபு எம்.சி,, சாமினாசெல்வம் எம்.சி', செர்லி தாமஸ் ஜெய் எம்.சி, வட்டக் கழக செயலாளர் இரா.குமாரசாமி, ஜெ.திவாகர், எம்.கே.ஜெய், பகுதி கழக ,வட்டக் கழக, மாவட்ட ,பகுதி, வட்ட, அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## சோ.துரை பாண்டியன் தலைமை! ஆர்.குமரேசன் ஒருங்கிணைப்பு!

# கோவை கவுண்டம்பாளையம் பகுதி 35வது வார்டில் போர்வெல் அமைப்பு!

## நா.சம்பத் எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது!

கோவை, டிச. 13 -

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதிக்கு உட்பட்ட 35வது வார்டில், மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் பேரில், மாவட்டச் செயலாளர் தோ.ஆ.ரவி ஆலோசனையின் பேரிலும், இளைஞர் அணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, இடையர்பாளையத்தில் , கா.மருதமுத்து நினைவு முத்தமிழ் மன்றம் அருகில் உள்ள குறுக்கு சந்துகளில் நடந்த சாலை பணிகள் அமைக்கும் நிகழ்வு, அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன் தலைமையில், வட்டக் கழக செயலாளர், ஆர். குமரேசன் ஒருங்கிணைக்க 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் முன்னிலையில் அனைவரும் கலந்து கொண்டனர் .

மாமன்ற உறுப்பினர் சம்பத் அவர்களின் விடா முயற்சியின் பேரில், பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, 20 வருட நெடுங்காலமாக சாலைகள் போடப்படாமல் இருந்ததை, கான்கிரீட் சாலைகளாக மாற்றப்பட்டு புதுமைப் பொலிவுடன் காணப்படுவதோடு, எங்கள் பகுதியில் புதிய கழிவுநீர் சாக்கடைகள், பொதுமக்களுக்கு உபயோகத்திற்காக சீரான குடிநீர் விநியோகம் மற்றும் குறிப்பிட்ட பகுதிகளில் போர்வெல் போடப்பட்டன போன்ற இவை அனைத்தும் 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத், பெரும் முயற்சியால் மாநகராட்சியின் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்பட்டன என்பதால், பொதுமக்கள் குறிப்பாக மகளிர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து பாராட்டு தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மகளிர்களுக்கும் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் இனிப்புகள் வழங்கி, உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினம் உற்சாகமாக கொண்டாடப்பட்டது .



சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி, 184 வது வட்டம், சீவரம் செல்வகணபதி அவின்யூவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதி இரா.இராஜேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, 14 வது மண்டல குழு தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் த.விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்று நல உதவிகள் வழங்கினர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி மதுரவாயல் சம்பந்தம் நகர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடையை சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இதில் மண்டலக்குழு குழு தலைவர் வே.ராஜன், வே. மதியழகன் செல்வி ரமேஷ் எம்.சி. மற்றும் நுகர்வோர் அங்காடி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.